Registered as a News Paper மக்கங்கள் 04 விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்:- 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 வைகாசி 01 ( 14 - 05 - 1992 ) வியாழக்கிழமை ஓசை: 86

## மீட்பு நிதி கடன் மீளளிப்பு இடம்பெறும் இடங்கள்

மீட்பு நிதி கடன் பத்திரதாரர்களில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கான கடன் மீளளிப்பு 16 ஆம், 17 ஆம் திகதிகளில் பின்வரும் இடங்களில் மேற் கொள்ளப்படும் என விடுதலைப் புலிகளின் நிதிப் பொறுப்பாளர் செ. தமிழேந்தி அறிவித்துள்ளார். மானிப்பாய், சங்கானை, தெல்லிப்பளை. காரைநகர் ஆகிய இடங்களுக்கான கடன் மீளளிப்பு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் 16ஆம் திகதி காலை 9-00 மணிக்கும், நல்லூர், யாழ்ப்பாணம், கோப்பாய், உடுவில், வேலணை பிரிவுகளுக்கு நல்லூர்-மங்கையற்கரசி மகா வித்தியாலயத்தில் 16 ஆம் திகதி பிற்பகல் 2 - 00 மணிக்கும், கரவெட்டி, பருத்தித்துறை வட-கிழக்கு பிரிவுகளுக்கு (4ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் கொந்தளிப்பு

# தமிழ் மாணவர் பேரணி மீது சிங்கள பொலிஸார் தடியடி

## கடத்தப்பட்ட மாணவிகளை விடுவிக்க கோரி இரண்டாயிரம் மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் களுவாஞ்சிக்குடியில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் மாணவர் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நேற்று முன்தினம் நடத்தினர். சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட இரு மாணவிகளை விடுதலை செய்யக் கோரி இவ் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடைபெற்றது. இவ் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தைக் கலைக்க சிறிலங்கா பொலிசார் நடத்திய கண்மூடித்தனமான தடியடிப் பிரயோகத்தில் பல மாணவ, மாணவிகள் படுகாயமடைந்தனர். நூற்றிற்கு மேற்பட்ட மாணவர்கள் கைது செய்யப்பட்டனர்.

## அரச அதிபர் கொழும்பு பயணம்

யாழ் அரசாங்க அதிபர் எதிர் வரும் சனிக்கிழமை கப்பல் மூலம் கொழும்பு செல்லவுள்ளார்,

இவர் 19ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள புனர்வாழ்வு உயர் மட்டக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளார் இக்கூட்டத்திலேயே புனர்வாழ்வு புனரமைப்பு தொடர்பாகத் தேவையான நிதிகள் மாவட்ட ரீதியாக ஒதுக்கப்படுவது வழக்கம், 20ஆம் திகதி மாகாண சபை கவர்னரின் அழைப்பின் பேரில் நடைபெறவுள்ள முக்கிய கூட்டம் ஒன்றில் கலந்து கொள்வார் அனைத்து அரசாங்க அதிபர்களும் இக் கூட்டத்தில் கலந்து கொள்கின்றனர். இக் கூட்டத்தில் மாகாண சபைகளின்வேலைத் திட்டங்களைத் துரிதப்படுத்துவது. வெற்றிடங்களை நிரப்புவது, உதவி அரசாங்க

[ 4ஆம் பக்கம் பார்க்க]

## வீரச்சாவு துரோணன்



செட்டிக்குளம் முதலைக் குட்டி சிறிலங்கா காவலரண்கள் மீது நேற்று முன்தினம்விடுதலைப்புலிகள் மேற்கொண்ட துணிகரமான அதிரடித் தாக்குதலில் வீரவேங்கை துரோ

(4 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் கண்ணிவெடி பல இராணுவத்தினர் பலி

(திருக்கோணமலை)

புல்மோட்டையில் விடுதலைப் புலிகள் வைத்தகண்ணிவெடியில் சிக்கி பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் புல்மோட்டை பதினைந்தாம் கட்டை என்னுமிடத்தில் எறிகணைகளுடன் பொருத்தப்பட்டதாக இருந்த இந்த கண்ணிவெடி கடந்த ஏழாம் திகதியன்று வெடிக்க வைக்கப்பட்டது. அப்போது பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

## செட்டிகுளம் இராணுவம் பலத்த எறிகணை வீச்சு

(செட்டிகுளம்)

செட்டிகுளம் இராணுவ முகாம் பகுதியிலிருந்து சிறிலங்கா இராணுவத்தினர் பலத்த எறிகணைத் தாக்குதல்களையும், மக்கள் குடியிருப்பு நோக்கி ஐம்பது கலிபர் தாக்குதல்களையும் நடத்தி வருகின்றனர்.

நேற்று முன்தினம் பகலிருந்தே ஆரம்பிக்கப்பட்டு இத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன.

கட்டை என்னுமிடத்தில் எறி னர்.

## வண. பிதா கேப்பையர் இராணுவத்தால் கொலை?

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட வண. பிதா கேப்பையர் இதுவரையில் விடுவிக்கப்படவில்லை எனத் தெரிய வருகின்றது.

1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ஏறாவூர் பகுதியில் இன்னுமொருவருடன் துவிச்சக்கர வண்டியில் பயணம் செய்த வண. பிதா கேப்பையர் ஏறாவூரில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டவர் என்பது தெரிந்ததே.

அவரைப் பற்றிய தகவல் எதையும் வழங்கவும் இராணுவத்தினர் மறுப்புத் தெரிவித்துள்ளனர். இவர் இராணுவத்தினரால் கொல்லப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

## ஐயங்கேணி தமிழர் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்டம் ஐயங்கேணிப் பகுதியைச் சேர்ந்த தமிழ்க்குடும்பங்கள் அண்மையில் பொலநறுவைச் சம்பவங்களை அடுத்து தமதுபாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாக மட்டு அரச அதிபர் மோனகுருசாமியிடம் புகார் தெரிவித்துள்ளனர்.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது கடந்த 1990ஆம் ஆண்டுயூன்மாத கலவரங்களை அடுத்து மட்டுநகரில் அகதிகளாக தங்கி இருந்தனர். பின்னர் தத்தமது இடங்களுக்கு திரும்பியவர்களில் ஐயங்கேணியில் வசிக்கும் தமிழ்க் குடும்பங்களுக்கே இவ் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

ஆயுதபாணிகளாக பலர் வந்து தமக்கு கொலைப்பயமுறுத்தல்களை விடுகின்றனர். வெவ்வேறு வகையில் அவர்களது தொல்லைகள் அதிகரித்து வருகின்றன. இதனால் சம்பந்தப்பட்ட பகுதி மக்கள் அச்ச உணர்வுடனும் பாதுகாப்பு குறித்து கேள்விக் குறியுடனும் வாழ்வதாக மேற்படி அரச அதிபருக்கு புகார் தெரிவித்துள்ளனர்.

## பழுகாமத்தில் போர்க்கால கருத்தரங்கு

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பழுகாமம் திரௌபதி அம்மன் ஆலய முன்றலில் தமிழீழ விடுதலைப் புலிகளின் போர்க்காலக் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது.

கடந்த 10 ஆம் திகதி பிற்பகல் 2.45 மணியளவில் ஆரம்பமாகிய இக்கருத்தரங்கில் மட்டு, அம்பாறைதொடர்பகப் பொறுப்பாளர் திரு. யோகா, மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் திரு. பாவேந்தன், மற்றும். வின்சன் ஆகியோர் உரைநிகழ்த்தினர். இக் கருத்தரங்கில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

## ராஜீவ் காந்தி கொலை; விசாரணை தொடர்கிறது

(டில்லி) - ஜேக்கப்

ராஜீவ்காந்தி கொலை செய்யப்பட்ட வழக்கு தொடர்பான விசாரணைகள் இன்னமும் நடைபெற்று வருகின்றது என்றும் இது தொடர்பான அறிக்கை விரைவில் சமர்ப்பிக்கப்படும் என்றும் இந்திய உள்துறை இணையமைச்சர் எம். எம். ஜேக்கப் தெரிவித்தார்.

நேற்று லோக்சபாவில் இதனைத் தெரிவித்த அவர், இந்த வழக்கில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் முக்கியமான ஒருவராக இனங்கண்டறியப்பட்டிருப்பதாகவும்,

சிறப்பு விசாரணைக் குழுவுடன் இலங்கை அதிகாரிகள் இதுவரை முழு அளவில் ஒத்துழைத்திருப்பதாகவும் ஜேக்கப் தெரிவித்தார்.

நூற்றிற்கு மேற்பட்ட மாணவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இம் மாதம் ஐந்தாம் திகதி மட். பட்டிருப்பு மகாவித்தியாலயத்தில் கல்வி பயிலும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த புவனேந்திரராசா யசோதினி, புவனேந்திரராசா தேவாஜினி ஆகிய இரு மாணவிகளும் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர். இவர்களை விடுவிக்கக் கோரியும் கடந்த காலத்தில் இவ்வாறு நடைபெற்ற மாணவர்கள் மீதான தாக்குதல்களையும் மாணவர்கள் கைது செய்யப்படுவதையும் கண்டித்தே இவ் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடாத்தப்பட்டது.

நேற்று முன் தினம் நடைபெற்ற இவ் ஊர்வலத்தில் மட். பட்டிருப்பு மகாவித்தியாலயம், களுவாஞ்சிக்குடி சரஸ்வதி வித்தியாலயம், வினாயகர் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயத்திலிருந்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பட்டிருப்பு அதிபர் இராணுவத்தால் கைது

[மட்டக்களப்பு]

களுவாஞ்சிக்குடியில் இடம் பெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலத்தினையடுத்து நேற்று மட். பட்டிருப்பு மத்திய மகாவித்தியாலய அதிபர் திரு. அருட்பிரகாசம் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டிருக்கிறார். இவர் இது வரை விடுவிக்கப்படவில்லை.

# வீரமுனை தொழிலாளர்கள் மீது அதிரடிப்படை தாக்கு

### மக்கள் மத்தியில் அச்சம்

[மட்டக்களப்பு]

சம்மாந்துறை வைக்கோல் கொள்வனவு நிலையத்தில் மீண்டும் வேலைக்குச் சேர்ந்த பதினாறு தமிழ்த் தொழிலாளர்களை சம்மாந்துறையிலுள்ள சிறிலங்கா அதிரடிப் படையினர் கைது செய்து மோசமாகத் தாக்கியதைத் தொடர்ந்து வீரமுனைப் பகுதியில் வாழும்தமிழர்மத்தியில் பதற்றம் நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது. 1990 ஜனவரி முதல் ஆகஸ்ட் மாதங்களில் வீரமுனையில் அகதிகளாக்கப்பட்டு வெளியேறிய தமிழர்கள் ஜனாதிபதி ஆர் பிரேமதாசாவின் பணிப்புரையின் பேரில் குடியமர்த்தப்பட்டவர்கள் ஆவர்.

ஆனால் தொடர்ந்து ஏற்பட்டு வரும் நிகழ்வுகள் அம் மக்கள் மத்தியில் பதற்றத்தை ஏற்படுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்மாந்துறை வைக்கோல்

[4 ஆம் பக்கம் பார்க்க]

# முஸ்லிம் காடையர் கடத்திய பன்னிரெண்டு தமிழர் கொலை

(மட்டக்களப்பு)

வாழைச்சேனை காகித ஆலை சுற்றாடலில் கடந்த மாதம் 29 ஆம் திகதி முஸ்லிம் ஊர்காவற் படையினரால் கடத்திச் செல்லப்பட்ட பன்னிரண்டு பேரும் கொலைசெய்யப் பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடத்திச் செல்லப்பட்ட பதின்மூன்று பேரில் சிறுவன் ஒருவன் திரும்பி வந்து புகார் செய்தது தெரிந்ததே.

இவனது புகாரை அடுத்து இவர்களை காட்டுப்பிரதேசம் காவத்த முனை, ஓட்டமாவடி ஆகிய இடங்களில் தேடுதல் நடத்தப்பட்ட போதும் இது வரை எவரும் கண்டுபிடிக்கப் படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# மருதங்கேணியில் குண்டு வீச்சு; இருவர் காயம்; வீடுகள் சேதம்

(வடமராட்சி கிழக்கு)

சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான குண்டு வீச்சு விமானங்கள் நேற்று மருதங்கேணிப் பகுதியில் நடத்திய குண்டு வீச்சினால் இருவர் படுகாயமடைந்தனர். இரண்டுவீடுகள் சேதமடைந்தன.

இச் சம்பவத்தின் போது படுகாயமடைந்த திருமதி திரவியம் இராஜேஸ்வரி(வயது45) திரு. அன்ரன் (வயது 24) ஆகிய இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் பற்றி தெரிய வருவதாவது; நேற்றுக் காலை 11.00 மணியளவில் வந்த இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் நான்கு குண்டுகளை வீசி விட்டுச் சென்றன.

நேற்று முன்தினம் காலை இப் பகுதிக்கு மேலால் சீ-பிளேன் பல தடவை வட்டமிட்டுச் சென்றது. (36,பா)

நோக்கி ஐம்பது கலிபர் தாக்கப்பட்டன.

## இரு யாழ். பயணிகளை இராணுவம் தடுத்து வைப்பு

[யாழ்ப்பாணம்]

வவுனியா இராணுவத்தடை முகாமில் யாழ்ப்பாணம் நோக்கி வந்த இரு பயணிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிய வருகிறது.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த கல்வியங் காட்டுப் பகுதியைச் சேர்ந்த இருவர் வவுனியா இராணுவத் தடை முகாமில் தடுக்கப்பட்டனர். எனவும், அவர்களது உறவினர்கள் வவுனியாவுக்கு சென்று விசாரித்தபோது அவர்களைக் கொழும்புக்கு அனுப்பி விட்டதாக இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாகவும் அறிய முடிகின்றது. (75)

## நிரந்தர பயண அனுமதி; யூன் முதல் புதிய நடைமுறை

இம்மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் விநியோகிக்கப்பட்ட நிரந்தர அனுமதி அட்டைகள் யாவும் 31-05-92 ஆம் திகதி வரைக்குமே செல்லுபடியாகும் அதன் பின்னர் 01-06-92 ஆம் திகதி முதல் புதியநடைமுறைக்கு உட்பட்ட நிரந்தர அனுமதியை பெற்றுள்ளவர்கள் மட்டுமே வவுனியாசோதனை நிலையத்தின் ஊடாக பிரயாணம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள் என்று போக்குவரத்து கண்காணிப்பு பிரிவு அறிவித்துள்ளது.

## ஐ. நா. தொண்டர் சேவை 100 டாக்டர்கள் அனுப்பும்

[கொழும்பு]

ஐக்கிய நாடுகள் கடல் கடந்த தொண்டர் சேவை ஸ்தாபனம் இலங்கைக்கு விசேட தரம் பெற்ற நூறு டாக்டர்களை அனுப்பி வைக்க இணங்கியுள்ளது என்று கொழும்புப் பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

டாக்டர் ஒருவருக்கானவருடாந்த சம்பளம் 12,000அமெரிக்க டொலர்கள் என்றும், இதனை ஐக்கிய நாடுகள் தொண்டர் ஸ்தாபனம் வழங்கும் என்றும் அவை குறிப்பிட்டுள்ளன.

## பிரசவத்தின் போது இளம் தாய் மரணம்

### போக்குவரத்து வசதியின்மையே காரணம்

(வடமராட்சி கிழக்கு)

பிரசவத்தின் போது வைத்திய சாலையில் இளம் பெண் ஒருவர் மரணமானார்.

இச் சம்பவம் வடமராட்சி கிழக்கிலுள்ள அம்பன் அரசினர் பிரசவ விடுதியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

விசுவநாதன் தவமலர் (வயது 19) என்ற இளம் பெண்ணே மரணமானவராவார்

(4ஆம் பக்கம் பார்க்க)

## 21, 22 ஆம் திகதிகளில் தமிழ்த் தினப் போட்டி

[யாழ்ப்பாணம்]

யாழ். கல்வித்திணைக்களத்தினால்நடாத்தப்படும்தமிழ்த் தினப் போட்டி எதிர்வரும்21, 22 ஆம் திகதிகளில் மானிப்பாய்இந்துக்கல்லூரியில் நடைபெறும்.

இப் போட்டிகளில் யாழ். மாவட்ட பாடசாலைகளின் கோட்டங்கள் மூலம் தெரிவு செய்யப்பட்ட எழுத்து, பேச்சு, கவிதை, நாடகம், வில்லிசை உட்பட சுமார் நாற்பத்து நான்குவகையான நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன இதில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

13/5 Wed.

## வரி விளம்பரம்


### சங்கீதம் வினாவிடை

சங்கீதம் வினாவிடை தயாரிப்பு ஸ்ரீமதி தாட்சாயணி சிவானந்த சர்மா 6 ஆம், 7 ஆம், 8 ஆம், 9 ஆம் ஆண்டுகளிலும் வட இலங்கைச் சங்கீத சபையின் 2 ஆம் தரம் பரீட்சைகளுக்கான பாடத்திட்டங்களை உள்ளடக்கியது. நடுவுத் துருத்தி நல்லூர்ச் சந்தை வெளியீடு: கிடைக்குமிடம் ஸ்ரீ காந்தா புத்தகசாலை, 330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(6250)

### பசுப்பால்

நாளாந்தம் எம்மிடமுள்ள மேலதிகபாலை வாங்கவிரும்புவோர் தொடர்பு கொள்ளவும். யாழ் மாவட்ட அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கம் கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கு. (ஜி/4413)

### தேர்த்திருவிழா

தொல்புரம் கொட்டடியம் பதி அருள்மிகு ஸ்ரீ ஆதிமுத்து மாரி அம்பாள் தேவஸ்தான அலங்காரமகோற்சவம் கடந்த 05-05-92-ல் ஆரம்பமாகியுள்ளது. வரும் 17-05-92- காலை 9.00 மணிக்கு தேரில் அம்பாள் எழுந்தருளி அருள்பாலிப்பார். தொடர்ந்து மாலை 3.00 மணியளவில் தீர்த்த உற்சவமும் அதைத்தொடர்ந்து திருவூஞ்சலும் இடம் பெறும்.

மறுநாள் 18-05-92 திங்கள் மாலை 5-00 மணியளவில் கிராம ஊர்வலம் இடம் பெறும்.

உற்சவ காலத்தில் தினமும் மாலை விசேட சிறப்புச் சொற்பொழிவுகள் கதாகாலாட்சேபங்கள் திருமுறைப் பண்ணிசைகள், இன்னிசை நிகழ்ச்சிகள் என்பன இடம் பெறும் (24)

### ஆதாரம் காட்டிப் பெறவும்

அளவெட்டியைச் சேர்ந்த கணேசன் சின்னையா (இல 502003100 V) என்பவரது அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு எமது காரி...


# பெண் கல்வியின் அவசியம்

அன்றில் இருந்து 20 ஆம் நூற்றாண்டின் தொடக்க காலம் வரை பெண்களுக்கு கல்வி சில குறிப்பிட்ட நோக்கங்களுக்காகவே வேண்டப்பட்டது. ஆனால் காலத்தின் தேவைகளுக்கிணங்கவும் சமூக மாற்றங்களுக்கிணங்கவும் இந்த நோக்கங்கள் மாறுபடுகின்றன.

20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் பெண்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட பத்திரிகைகள் எல்லாம் பெண்கல்வியை வீட்டு நோக்கங்களுக்காகவே வற்புறுத்தின. ஆண்கள் கற்கத் தொடங்கி பாரம்பரிய வேலைகளல்லாத அலுவலக உத்தியோகங்களுக்கு செல்லத் தொடங்கிய போது சரியோ, பிழையோ அவனுக்கு துணைவியாக அமைகின்ற மனைவிக்கும் சில உலக அறிவு வேண்டுமென எதிர் பார்க்கப்பட்டது. அதற்காகவே ஆரம்பத்தில் கல்வி திட்டமிடப்பட்டது. பெண்களுக்காக முதன் முதலில் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட கல்லூரியான உடுவில் மகளிர் கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட போது தையல், மனைஇயல் இரண்டும் முக்கிய பாடங்களாக இருந்தது குறிப்பிட வேண்டியதாகும். குழந்தைப் பராமரிப்பு, வீட்டுப் பராமரிப்பு போன்ற தேவைகள் காரணமாகவே இப்பாடத்திட்டம் சுகாதாரத்தையும் உள்ளடக்கி இருந்தது

உலகம் விஞ்ஞான ரீதியாக மாற்றம் அடைந்த போது விரும்பியோ விரும்பாமலோ உலக மக்களில் சரிபாதியான பெண்களும் மாற்றமடையத் தொடங்கினர். கல்வித்திட்டம் ஆண் பெண் இருபாலாருக்கும் பொதுவாக்கப்பட்டது பெண்களும் கல்வி அறிவுபெறத் தொடங்கினர். எனினும் இத்தக் கல்வியின் நோக்கம் நிறைவேறியதா? என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

இலவசக்கல்வி, யாபேருக்கும் கல்வி போன்ற திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டாலும் பெண்கள் நடைமுறை அறிவற்ற 'தற்குறி' களாகவே உள்ளமைவெளிப்படை.

கல்வி அளித்தல் என்பது இங்கு கட்டாயமாக்கப்பட்டமையின் வெளிப்பாடே இது எனலாம். ஒரு சமூகத்தின் அச்சாணியாக விளங்குபவர்கள் பெண்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். ஏனெனில் வீட்டில் இருந்தே உலகின் சகலதும் ஆரம்பிக்கின்றது. அந்தப் பெண் அறியாமையில் மூழ்கி இருப்பாளெனில் அங்கு ஒன்றும் நடைபெற முடியாது. 'மாதர்களை

## நிதர்சனா

இருட்டிலே தள்ளிவிட்டு அவர்கள் அறியாமல் நீங்கள் (ஆண்கள்) மேல் நிலைமைக்கு வந்துவிட முயல்வது வீண் முயற்சி, அது ஒரு போதும் நடக்க மாட்டா' என்று நிவேதிதா தேவி கூறியது போலவே ஆகி விடுகின்றது,

பெண்கள் அறிவு அற்றவராக இருக்கும் போது பலமற்றவராகவும் இருக்கின்றார்கள். தங்களுடைய அடிமைத்தனம் அல்லது தங்களுடைய பொருளாதார சமூக அரசியல் சிக்கல்களுக்கான காரணம் என்ன என்பதை அறியாதவராகி விடுதல் இயற்கைக் கல்வி அறிவு பெறாத ஒரு தாய் தன்பிள்ளைகளுக்கு கல்வி கற்பிக்க முயலமாட்டாள். அல்லது அவள் கல்வி அறிவின் நன்மை பற்றிய அறிவையே னும் பெற்றிருத்தல் அவசியமாகும். எனவே தான் பெண்ணுக்கு கல்வி என்பது குடும்பத்தின் கல்வி என உணரப்படுகின்றது.

இரண்டாவதாக பெண்களில் தங்கிவாழ்தலுக்கு அறியாமை ஒரு காரணமாகும். சிறு விடயங்களில் முடிவெடுப்பதற்கும் வேறு ஆட்களின் ஆலோசனைகளைக் கேட்க முயலுதல் அல்லது அதிகமாக தேவையற்ற விடயங்களுக்கும் பயப்படுதல் போன்றன பெண்களிடையே காணப்படுகின்றன இதற்கு அறிய வேண்டியவற்றை அறிதல் முக்கியமாகும்.

கன்னிப் பெண்ணாக இருக்கும் நிலையிலும், விதவை நிலையிலும் மற்றவர்களிடம் தங்கி வாழ்தலுக்கு முக்கியமாக பொருளாதார ரீதியில் தான் சுதந்திரமானவளாகத் தன் காலில் தான் நிற்க வேண்டும் என்ற அறிவைப் பெறாத பெண் தனது கணவனை இழந்த பிறகு விதவை நிலையில் அந்தரித்துப் போவதுடன் மற்றவர்களுக்கும் பாரமாகிறார். கன்னிப்பெண் தாய், தந்தையை திடீரென இழக்குமிடத்து தன்னை பார்க்க முடியாமல் தவித்துப் போகிறாள். இந்த நிலை தவிர்க்கப்படவேண்டுமெனில் அவள் உழைப்பதற்கான கல்வி அளிக்கப்பட வேண்டும்.

திருமணமாகிக் குழந்தைகளைப் பெறும் நிலையில் தன்னைப் பராமரித்தல், குழந்தையைப் பராமரித்தல் வளர்த்தல் போன்ற கடமைகள் அவளுக்குண்டு. உடல்நலக் கல்வியை அறியாத நிலையில் பெண் தன் குழந்தையை இழந்து போவதோ அல்லது குழந்தை ஊனமாக பிறப்பதோ, சுகவீனமான குழந்தையாக, பலமற்ற குழந்தையாக, பிறப்பதோ, நடந்து விடுவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

முன்னைய காலங்களை விடப் பெண் இப்போது வேறு பிரச்சினைகளிற்கும் முகம் கொடுக்க வேண்டி உள்ளது. குழந்தைகள் ஒரு சிக்கலான மனித நாகரிகமற்ற ஒரு உலகத்திலே வந்து பிறந்திருக்கின்றார்கள். எனவே அவர்களுடைய உளவியல் பாதிப்புகளைக் கண்டுணர்ந்து அவர்களின் அப்பாதிப்புகளை நீக்குவதற்குத் தன்னாலான முயற்சிகளைச் சிறிதளவேனும் செய்யத்தக்கதாக இருத்தல் அவசியமாகின்றது. சில தாய்மார்கள் குழந்தைகள் தவறு விடும்போது எடுத்ததற்கெல்லாம் தண்டனை கொடுப்பதை வழக்கமாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இது தவறானது என்பதனை அவர்கள் உணர்ந்திருத்தல் அவசியம்.

அடுத்ததாக உலகம் தற்போது விரிவடைந்திருக்கிறது. தேசத்தின் எந்தவிதமான பெருங்காரியமும் கைகூடி வர வேண்டுமானால் அதற்கு ஸ்திரீகளின் மனோவலிமை இல்லாமல் தீராது என்று பாரதி சொன்னதுபோல இந்தத் தேசத்தின் பொருளாதார, சமூக, அரசியல் அபிவிருத்திகள் பெண் அறிவு பெறாமல் ஏற்பட முடியாது.

வெறுமனே, சும்மா இருந்து கதைக்க பெண்கள் கூட்டமே அதிகமாக உள்ள எமது சமுதாயப் பெண்கள் சமையல் நேரம் தவிர்ந்த நேரங்களில் உலக விடயங்களை ", அறிதல்" சம்பந்தமான அறிவைப் பெருக்குவதன் மூலம் தனக்கும், தன் குடும்பத்தினரதும், தன் நாட்டினதும் முன்னேற்றத்திற்குக் காரணிகளாக அமைய முடியும்.

# தங்கத்தை கடத்த முயன்ற மூவர் கொழும்பில் கைது

கடந்த ஞாயிறன்று இந்தியாவுக்குபயணம் செய்த மூன்று இலங்கையர்கள் 8,39,520 ரூபா பெறுமதியான 26 தங்கக் கட்டிகளை தங்களின் பாக்குகளில் ஒளித்து வைத்துக் கடத்திச் செல்ல முயன்ற போது கட்டுநாயக்கா விமான நிலையத்தில் சிக்கிக் கொண்டனர்.

26 தங்கக் கட்டிகளும் ரொபி பேப்பரில் சுற்றப்பட்டு பெட்டிகளுக்குள் ஒளித்து வைக்கப்பட்டிருந்தன.


## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்
07-12-1965

தாயக மண்ணில்
14-05-1989

### கப்டன் கில்மன்
### ( கிருஸ்ணசாமி இராமச்சந்திரன் )

மண் மீட்பு மானங்காக்க
மரணத்தைப் பரிசாக ஏற்ற
எங்கள் இனத்தின்
வீரம் விளைத்த விடுதலைப்புலியே!
கண்மூடித் தனங்கள் செய்த
காடேறிப் படைகளது
சித்தங் கலங்க வைத்த சிம்மசொர்ப்பனமே!
எதிரிகள் ஏந்திய ஆயுதங்களை
எம்மவர் கைக்கு மாற்றிவிட்டு
எதிர்பாரா நேரத்தில் எமைப் பிரிந்துவிட்டாய்!
நீ கொண்ட இலட்சியப் பாதை
ஒருநாள் நிறைவேறும் கில்மா!
உன் கல்லறை மலர நாம் கண்ணீர் சிந்துகிறோம்.

கணந்தோறும் உன் நினைவால்
கலங்கி வாடும்:
அப்பா, அம்மா,
சகோதர சகோதரிகள்,
நண்பர்கள்.

மீசாலை தெற்கு,
மீசாலை.

(2564)


## றப்பர் பொருள் உற்பத்தி பெருமளவில் பாதிப்பு

## மட்டக்களப்பு திறந்த பல்கலைக்கழக விரிவுரைகள், பரீட்சைகள்

## நினைவு கூருகின்றோம்...

ரது அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

## கிருமிநாசினி அருந்தி தற்கொலை

வவுனியா மணிபுரம் பகுதியில் முதியவர் ஒருவர் கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

சுயம்பு என்ற பதின்மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு தற்கொலை செய்து உயிரை மாய்த்துக்கொண்டவராவார்.

சுமார் எண்பது வயது நிரம்பிய இம்முதியவர் குடும்பத்தகராறு காரணமாகவே தற்கொலை செய்து கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (தி)

## செஞ்சிலுவை உதவித்தொகை வழங்கும்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க கோப்பாய் உதவிஅரசாங்க அதிபர் பிரிவு கிளை சுயதொழில் ஊக்குவிச்கு முகமாக உடல் ஊனமுற்றோருக்கு ஆயிரம் ரூபாவை வழங்கவுள்ளது.

இத்தொகையானது ஒவ்வொரு கிராமசேவையாளர் பிரிவிலிருந்தும் ஒவ்வொரு உடல் ஊனமுற்றோர் வீதம் தேர்ந்தெடுத்து வழங்கப்படவுள்ளது. இதற்கான முயற்சியில் மேற்படி சங்க செயலாளர் மயில்வாகனம் ஈடுபட்டுள்ளார்.

மேற்படி உதவி அரச அதிபர் பிரிவில் 32 கிராம சேவகர் பிரிவுகள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## மெய்வல்லுநர் போட்டி

கோப்பாய் தெற்கு கந்தவேள் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் சனிக்கிழமை மாலை 2, 30க்கு அதிபர் திரு. வ. வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது. இவ் இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராக மருதனார்மடம்பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் கலந்து கொள்கிறார்.

## பெருமளவில் பாதிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா றப்பர் பொருள் உற்பத்தித் தொழில் கடந்த பத்து வருடங்களில் பாதிக்கப்பட்டுள்ளது என்று றப்பர் பொருள் உற்பத்தியாளர் சங்கத் தலைவர் டி. பி. இறபெருமா தெரிவித்தார்.

றப்பர் மற்றும் பிளாஸ்டிக் நிலையத்தின் ஆறாவது தொழில் நுட்ப அமர்வில் பேசும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பதிவுசெய்யப்பட்ட றப்பர் பொருள் உற்பத்தியாளர் 1980களில் 200 பேர் இருந்தார்கள். இது இன்று 27 ஆகக் குறைந்துள்ளது. வெளிநாட்டு முதலீடு ஆலோசனைக்குழு ஆதரவில் நடைபெறும் மேற்படி தொழிற்சாலைகளும், சுதந்திர வர்த்தக வலயத்திலும் இதே நிலைதான். இந்த இரு அமைப்புக்களிலும் 1980களில் 15 றப்பர் தொழிற்சாலைகள் பொருள் உற்பத்தியில் ஈடுபட்டிருந்தன. இன்று ஆறு தொழிற்சாலைகள் மட்டுமே செயற்படுகின்றன என்றார் அவர்.

தொடர்ந்து பேசும்போது; கடந்த ஏழு வருடங்களில் புதிய றப்பர் உற்பத்தித் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டது மிகக்குறைவு. ஆசியாவிலேயே பெரிய றப்பர் பொருள் உற்பத்தித் தொழிற்சாலைகள் இங்கு மூடுவிழா நடத்துவதற்கான காரணம் இன்னும் எமக்கு விளங்கவில்லை என்றார்.

## உல்லாச விடுதி கட்ட கெல உறுமய எதிர்ப்பு

(மாத்தளை)

தம்புளையில் கந்தலாம ஏரியின் அருகில் உல்லாச விடுதி கட்டும் திட்டத்தை நிறுத்த அரசு நடவடிக்கை எடுக்கும் வரை அரசுக்கெதிரான இயக்கம் ஒன்றை நடத்த கெல உறுமய முடிவெடுத்துள்ளது.

கடந்த வெள்ளியன்று உல்லாச விடுதி அமையவிருக்கும் இடத்தில் கூடிய கெல உறுமய குழுவைச் சார்ந்த பதினைந்து பாராளுமன்ற உறுப்பினர்கள், உத்தேச உல்லாச விடுதித் திட்டத்தைக் கைவிட்டு, ஏரியின் நீரை வயல்களுக்கு நீர்ப்பாசனத்துக்கு வழங்கும்வரை தாம் போராடப் போவதாக உறுதி செய்து கொண்டனர்.

கந்தலாம வேவ முதல் கலாவேவ வரையிலுள்ள ஆயிரக்கணக்கான விவசாயிகள் தமது போராட்டத்தால் பயனடைவார்கள் என்று கெல உறுமய தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மக்களின் எதிர்ப்புக்கு மத்தியிலும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடத்துக்கு முன்னால் அமையவிருக்கும் இரு உல்லாச விடுதிகளும் அரசின் ஆதரவுடன் அமையவிருப்பதை அவர்கள் வன்மையாகக் கண்டித்தனர்.

அமையவிருக்கும் இந்த உல்லாச விடுதிகளால் ஏரியிலிருந்து கிடைக்கும் நீர் மறுக்கப்படுவதோடு, மக்களின் விவசாயப் பொருளாதார வாழ்க்கையும் பாதிப்புக்குள்ளாகும் என்றும் கெல உறுமய உறுப்பினர் தெரிவித்தனர்.

ஏரிக்கண்மையில் மேலும் 20 ஏக்கர் நிலம் இத்திட்டத்துக்கென சுவீகரிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## கைப்பணிப்பொருட்காட்சி

(யாழ்ப்பாணம்)

கிராம அபிவிருத்தித் திணைக்கள யாழ். மாவட்டப் பிரிவினர் நடாத்தும் தையல், மனையியல், கைப்பணிப்பொருட்காட்சியொன்று நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறவுள்ளது.

மாவட்ட பிரதி ஆணையாளர் திரு. அ. வைத்திலிங்கம் தலைமையில் நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ள இப்பொருட்காட்சிக்குயாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் திருமதி கோ. மாணிக்கவாசகர் ஆகியோர்பிரதமவிருந்தினர்களாகவும் மாவட்டமேலதிகஅரச அதிபர் திரு, க. சண்முகநாதன், திட்டமிடல்பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திரு. வி. எஸ். சுவாமிநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்கின்றனர். (ச)

## யூன் மாதத்தில் ஆரம்பம்

(மட்டக்களப்பு)

திறந்த பல்கலைக்கழகஉயர் கல்வி டிப்ளோமாவிற்கான 1ஆம் 2ஆம் வருட விரிவுரைகளும் பரீட்சைகளும் எதிர்வரும் ஜூன் மாதத்திலிருந்து மட்டக்களப்பு திறந்த பல்கலைக்கழகத்தில் நடாத்தப்படும் என திறந்த பல்கலைக்கழக கல்விப்பீடப்பணிப்பாளர் கலாநிதி குணசேகரா தெரிவித்துள்ளார்.

உயர்கல்வி டிப்ளோமா விரிவுரைகளும் பரீட்சைகளும் கொழும்பில் நடாத்தப்படுவதால் கிழக்கு பகுதி மக்கள் மிகவும் பாதிக்கப்படுவதாக விடுத்த புகாரை அடுத்தே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## போரூட் ஆதரவில் 16 குளங்கள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

போரூட் நிறுவன உதவியுடன் யாழ் மாவட்டத்தின் புனரமைக்கப்பட்டுள்ள குளங்களைப் பார்வையிட்டு அறிக்கையை சமர்ப்பிக்க போரூட் நிறுவன நோர்வே பிரதிநிதி யாழ்ப்பாணம் வந்துள்ளார். நேற்றையதினம் இப்பிரதிநிதி இங்குள்ள சிலகுளங்களைப் பார்வையிட்டார். மேற்படி நிறுவன உதவியுடன் இது வரை பதினாறு குளங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன. இவ் அதிகாரி இக்குளங்களை பார்வையிட்டபின் அதுசம்பந்தமான அறிக்கை ஒன்றினை தலைமைப்பீடத்திற்கும் யாழ் அரசாங்க அதிபருக்கும் சமர்ப்பிப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் பின்னரே இத்தலைமைப்பீடம் இங்குள்ள ஏனைய குளங்களைப் புனரமைப்பது பற்றி ஆலோசிக்கும் என அறிவிக்கப்படுகிறது. இங்கு 30 றகும் மேற்பட்ட குளங்கள் இன்னும் புனரமைக்கப்பட வேண்டியுள்ளதுஎன்பது குறிப்பிடத்தக்கது. (ச பா)


யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

**விபுலானந்த அடிகள் நூற்றாண்டு விழாவும் நூற் கண்காட்சியும்**

**தமிழ் அறிஞர்களுக்கும் ஆர்வலர்களுக்கும் ஓர் அன்பான வேண்டுகோள்!**

எதிர்வரும் 24, 25, 26ஆம் திகதிகளில் யாழ்ப்பாண மாநகரசபையினால் நடாத்தப்படவிருக்கும் விபுலானந்தர் அடிகள் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு மூன்று நாட்களும் யாழ். பொதுசன நூலகத்தில் இடம்பெறவிருக்கும் புத்தகக் கண்காட்சியில் பயன்படுத்துவதற்குகந்த அடிகளாரின் ஆக்கங்கள், நூல்கள் மற்றும் அவரைப்பற்றிய ஆக்கங்கள், நூல்கள் என்பன தங்கள் வசமிருப்பின் அவற்றை எம்மிடம் அன்பளிப்பாகவோ, இரவலாகவோ அல்லது சகாய விலையிலோ வழங்கி மேற்படி புத்தகக் கண்காட்சி வெற்றிபெற பூரண ஒத்துழைப்பு வழங்குமபடி கேட்டுக்கொள்கிறேன்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
12-05-1992
(ஓ 4412)

வே.பொ.பாலசிங்கம்
மாநகரஆணையாளர்
யாழ்ப்பாணம்.



**நினைவு கூருகின்றோம்...**

**1992-05-14**

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் வில்பத்துக்காட்டில் சிறிலங்காப் படையினருடனான மோதலின் போது விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**லெப்.பிரசன்னா** (இரத்தினம் சதானந்தன் - 118, 10-ம் வாய்க்கால், உருத்திரபுரம், கிளிநொச்சி)

மானிப்பாயில் எமது சவர்க்காரத் தொழிற்சாலை ஒன்றின்மீது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையில் வீரச்சாவெய்திய -

**கரன்** (கணபதிப்பிள்ளை சிவசரணம் - தாவளை, இயற்றாலை)

**குட்டி** (சின்னத்தம்பி பரமேஸ்வரன் - நவாலி)

**தேவு** (சின்னையா சாந்தகுமார் - ஆனைக்கோட்டை)

1988ஆம் ஆண்டு மட்டக்களப்பு களுவங்கேணிப்பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**நாகவேல்** (மாங்காடு, மட்டக்களப்பு)

திருக்கோணமலையில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட அதேஇடத்தைச் சேர்ந்த-திரைப்படத் தயாரிப்பாளரான - தமிழ்ப்பெண்

1989ஆம் ஆண்டு திருநெல்வேலியில் இந்தியப் படையினருடனான மோதலின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**2-ம் லெப். டெஸ்மன்** (வேலையா ரமேஸ்குமார் - சிவன்வீதி, திருக்கோணமலை)

மிருசுவிலில் இந்தியப்படையினரின் காவலரண்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

**கப்டன் கில்மன்** (கிருஸ்ணசாமி இராமச்சந்திரன் - மீசாலைதெற்கு)

இதே சம்பவத்தின்போது பேருந்து ஒன்றின்மீது இந்தியப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட நெடுந்தீவு 3 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த தமிழ்ச்சிறுமி

மணலாறு, நெடுங்கேணிப்பகுதியில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட - உணவுவிடுதி ஊழியர் உட்பட - 2 தமிழர்கள்

யாழ். மருத்துவமனையில் இந்தியப்படையினரால் சடலமாக ஒப்படைக்கப்பட்ட தமிழ் இளைஞன்

1991ஆம் ஆண்டு அம்பாறை, தங்கவேலாயுதபுரம் பகுதியில எதிர்பாராத விதமாக ஏற்பட்ட பொறிவெடி விபத்தில் வீரச்சாவெய்திய -

**கஜன்** (கல்யாணகுமார் - தம்பிலுவில், அம்பாறை)

மட்டக்களப்பு / வாகரை. பூரியன்காடுப் பகுதியில் சிறிலங்காப்படையினரால் கைதுசெய்யப்பட்டு, பாலியல் வன்முறைக்குட்படுத்தப்பட்டு, வெட்டிக் கொல்லப்பட்ட வாகரை பாலர் பாடசாலை ஆசிரியை.

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்**

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/4411)

## சிந்தனைக்கு

தவறு செய்வதில் தொடர்ந்து முனைவது தவறுக்குச் சமாதானம் ஆகாது; தவறின் சுமையை மேலும் கனமாக்கும்

—வில்லியம் ஷேக்ஸ்பியர்

ஈழநாதம்

81, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம் 14-05-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 023-2889 நிர்வாகபீடம் 2308
க. பெ. எண் 08

# கடந்த கால தவறை புரிந்து கொண்ட டிக்சிற்

"புலிகளைத் தடை செய்வதால் இந்தியாவின் நீண்ட கால நலனுக்குப் பாதிப்பு ஏற்பட்டுவிடக் கூடாது" என இந்தியாவின் வெளிவிவகாரச் செயலாளர் ஜே. என். டிக்சிற் அண்மையில் பத்திரிகையாளர்களிடம் பேசும்போது தெரிவித்துள்ளார்.

இந்திய இராஜதந்திரிகள் வட்டாரத்தில் கடும் போக்கைக் கடைப்பிடிப்பவர் எனப் பெயர் பெற்றவர் ஜே. என். டிக்சிற். இந்தியாவிற்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தவிர்க்க முடியாமல் போர் ஒன்று ஏற்படுவதற்கு டிக்சிற்றின் பங்கும் மிகவும் கணிசமானதாகும். இந்தயுத்தத்திற்கு டிக்சிற்றின் தவறான அணுகுமுறையே காரணம் என வெளிப்படையாகக் குற்றம் சாட்டப்பட்டதும் உண்டு.

ஆனால், இன்று இந்தியாவில் விடுதலைப் புலிகளைத் தடை செய்வது குறித்த விவகாரம், பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ள இவ்வேளையில் விடுதலைப் புலிகளைத் தடை செய்வது நீண்ட கால நோக்கில் பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும் என ஜே. என். டிக்சிற் கருத்துக் தெரிவித்துக்கொண்டுள்ளதோடு விடுதலைப் புலிகளைத் தடை செய்வதால் லாபத்தை விட நட்டமே அதிகம் ஏற்படும் என்ற கருத்தைக் கொண்டும் உள்ளார்.

இராஜ தந்திரிகள் அரசியல் வாதிகளில் இருந்து வேறு பட்டவர்கள். பொதுவாக இராஜ தந்திரிகள் எப்பொழுதும் தமது தேசத்தின் நலனையே பிரதான நோக்கமாகக் கொண்டு செயற்படுவார்கள். அரசியல்வாதிகள் போன்று அதிகாரப் போட்டிக்காக நாட்டின் நலனைப் பணயம் வைக்கக் கூடியவர்கள் அல்ல. ஆனால், இராஜதந்திரிகளின் சில கணிப்பீடுகள் தவறாக இருக்கலாம். இதற்குச் சிலரின் பிடிவாத குணங்களும், திமிரும் காரணமாகலாம் அதாவது கடந்த காலத்தில் இலங்கை விவகாரத்தில் ஜே. என். டிக்சிற் நடந்து கொண்டது போன்று. இதனால் பாதகமான சில விளைவுகளும் ஏற்படலாம். ஆனால் அரசியல்

# ஜெயலலிதாவின் மிரட்டல்களுக்கு தமிழக பத்திரிகையாளர் அச்சம்

(சென்னை)

"தமிழ்நாட்டில் பத்திரிகைச் சுதந்திரம் ஆபத்துக்குள்ளாகி நசுக்கப்பட்டிருப்பதாகவும், அதற்குத் தானே பொறுப்பு என்று விசமத்தனமான பிரசாரத்தில் ஈடுபட்டு அதில் தன்னை தொடர்புபடுத்துகின்றவர்களை மக்கள் தண்டிக்க வேண்டும்."

இவ்வாறு தூத்துக்குடியில் அண்மையில் புதிய விமான நிலையமொன்றைத் திறந்து வைத்து உரையாற்றிய முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

முதல்வரின் இக்கோரிக்கையை அடுத்து இதனால் ஏற்படக்கூடிய சட்டம் ஒழுங்கு பிரச்சினைகளையும் இரத்தக்களரிகளையும் உணர்ந்திருக்கும் மக்கள் பெரிதும் கலவரமடைந்தவர்களாகவே காணப்படுகின்றனர். ஏனெனில் இதுபோன்ற கோரிக்கையை தமிழ்நாட்டு மக்கள் முன்னொருபோதும் கேட்டதில்லை.

இக்கோரிக்கைக்கு எதிராக மாநிலம் பூராவும் கண்டனக் குரல்கள் கிளம்பியுள்ளன; அத்துடன் இதன் பாரதூரத் தன்மைகளை விளக்கி தமிழக பத்திரிகைகள் ஆசிரிய தலையங்கங்களை தீட்டியிருக்கின்றன.

இதேவேளை தமிழக முன்னாள் முதலமைச்சர்கள் விடுத்த கோரிக்கைகளையும் தமிழக மக்கள் நினைவு மீட்டுப்பார்க்கத் தவறவில்லை.

1986 ஜூலையில் மதுரையில் அகிலஉலக எம்.ஜி.ஆர் மன்ற மாநாடு நடைபெற்ற போது எம்.ஜி ஆர் வினோதமான ஒரு அழைப்பை தனது கட்சிக்காரர்களுக்கு விடுத்திருந்தார்.

எதிரிகளிடம் இருந்து பாதுகாத்துக்கொள்ள அ.தி.மு.க. வினர் கத்திகளை கொண்டு திரிய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார் 'எதிரிகள்' என்று தான் யாரைக் கருதினார்கள் என்பதை தீர்மானிக்கும் பொறுப்பை கட்சி உறுப்பினர்களிடமே அவர் விட்டுவிட்டார். பழிக்குப் பழிவாங்கும் அடிப்படையில் தான் அன்று எம் ஜி ஆர் இக்கோரிக்கையை விடுத்திருந்தார்.

இம்மாநாடு நடைபெறுவதற்கு ஐந்து நாள் முன்னதாக தான் திராவிட முன்னேற்றக் கழகத்தலைவர் மு. கருணாநிதி தனதுகட்சிக்காரர்களிடம் சொந்த பாதுகாப்புப்படையை அமைக்குமாறு கோரியிருந்தார் "அ.தி மு.க. குண்டர்"களிடமிருந்து தங்களைப் பாதுகாக்கவே படைதேவைப்படுகிறது என கருணாநிதி சுட்டிக் காட்டியிருந்தார்.

எவ்வாறெனினும் இருகட்சி ஆதரவாளர்களும் தலைவர்களைப் போல பொறுப்பற்ற தன்மையில் நடந்துகொள்ளவில்லை என்று தான் கூறப்படுகிறது. இதன் மூலமாக கருணாநிதிக்கும் எம். ஜி. ஆருக்கும் இடையிலான போட்டா போட்டி வன்முறைப் பலப்பரீட்சையொன்றை நோக்கி போய்க்கொண்டிருந்தது என்ற கருத்து போலியானது என்பதை அவரவர் ஆதரவாளர்கள் புத்திசாலித் தனமான நடவடிக்கைகளினால் தமிழக மக்களுக்கு நிரூபித்துக் காட்டினர்.

கருணாநிதியும், எம். ஜி. ஆரும் அன்று விடுத்த அந்த அறை கூவல்கள் தமிழக அரசியல் கேவலமான நிலைக்கு கீழிறங்கியிருந்தது என்பதையே எடுத்துக் காட்டி இருந்தது.

ஆறுவருடங்கள் உருண்டோடி விட்டதன் பின்னால் முன்னைய முதலமைச்சர்கள் காலடி வைக்கத் தயங்கிய அந்தப் பாதையில் செல்ல இன்று ஜெயலலிதா தீர்மானித்திருக்கிறார் போலத் தெரிகிறது.

ஜெயலலிதா மேற்கூறிய கோரிக்கை அறை கூவலை விடுப்பதற்கு இரு நாட்களுக்கு முன்னால் சட்டசபைச் சபாநாயகர் சேடப்பட்டி ஆர். முத்தையா ஆவேசமாக ஒரு கோரிக்கையைச் சபையில் விடுத்திருந்தார். முதலமைச்சர் ஜெயலலிதா மீது சேற்றை வாரி வீசுபவர்களுக்கு எதிராகச் சிறப்புரிமை மீறல் தண்டனைகளுக்குப் புறம்பாக வேறுவிதமான நடவடிக்கை எடுக்கப்படுவதே சிறந்தது எனத் தெரிவித்திருந்தார்.

பத்திரிகைகளுக்கு எதிராக மக்களைத் தூண்டி விடுவதற்கு மேற்கொள்ளப்படும் இத்தகைய முயற்சிகளின் விளைவுகள் என்னவாக இருக்கும்? ஜெயலலிதாவைப்போல் அவரின் "மக்கள்" (அ. தி. மு. க வினர் என்று நினைத்துக் கொள்ளுங்கள்) பத்திரிகையாளர்களைத் தண்டிக்கத் தீர்மானித்தால் நிலைமை என்ன?

தமிழ்நாடு மாநிலத்தில் முன்னைய ஆட்சிகளின்போது அரசியல்வாதிகளின் நடவடிக்கைகள், மனித உரிமைமீறல்கள், பொலிஸாரின் அடாவடித்தனச் செயல்களை அம்பலப்படுத்த முயற்சித்த பத்திரிகையாளர்களுக்கு அளிக்கப்பட்ட "தண்டனைகள்" இன்னமும் மனதை விட்டகலாமல் நினைவில் உறுதியாக உள்ளன.

மக்கள் என்று இந்த அரசியல் வாதிகள் மனதில் நினைக்கும் அந்தக்கட்சிக்காரர்களின் ஆவேசத்துக்குப்பத்திரிகையாளர்களோ, எழுத்தாளர்களோ பயப்படவில்லை. பொதுமக்கள் காட்டும் எதிர்ப்பு என்ற போர்வையில் கட்சிக்காரர்கள் கண்மூடித்தனமான தாக்குதல்களில் இறங்கக் கூடிய சூழ்நிலையை அரசியல் தலைவர்களே தங்கள் பேச்சுக்களினால் உருவாக்குகின்றார்கள் என்பதே அவர்களின் கவலையாக இருக்கின்றது.

பத்திரிகையாளர்களுக்கும், தமிழ்நாடு சட்ட சபைக்கும் இடையே சர்ச்சை மூண்டிருக்கும் இன்றைய நிலையில் பத்திரிகை நிறுவனங்கள் அல்லது பத்திரிகையாளர்கள் மீது தாக்குதல்கள் இடம்பெற்றால் அத்தகைய வன்முறைக்கான முழுப்பொறுப்பும் முதலமைச்சர் ஜெயலலிதாவையே சாருமென்று - தமிழக பத்திரிகைத்துறை சார்ந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன

# ஜெயலலிதாவின் பொறுமையின்மையே இன்றைய பிரச்சினைக்குக் காரணம்

## -- கருணாநிதி குற்றச்சாட்டு

(சென்னை)

'காலஞ் சென்ற முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரனின் உருவப் படத்தை சட்டசபைக்குள் திரைநீக்கம் செய்து வைத்த அன்று பாரம்பரியங்களுக்கு முரணாக சபாநாயகரினதும் உப சபாநாயகரினதும் ஆசனங்களில் ஜெயலலிதாவும் அவரது தனிப்பட்ட உதவியாளர்களும் அமர்ந்த அக் கணத்திலேயே சட்டசபை அதன் தூய்மையையும் கௌரவத்தையும் இழந்து விட்டது. சட்டசபையின் நீண்டகால சரித்திரத்திலே முதலமைச்சர் ஒரு

முறை ஆட்சியை கண்டிக்கு முகமாக கடந்த வாரம் வட சென்னையில் சூளை எனும் இடத்தில் இடம்பெற்றபொதுக் கூட்டமொன்றில் பேசும்போது தெரிவித்தார்.

அவர் மேலும்கூறியதாவது:-

உயர் நீதிமன்றத்திற்குச் சவால் விடுக்கும் வகையில் சட்டசபைசெயற்பட்டால்பாரதூரமான விளைவுகள் ஏற்ப

நடுவர் மன்றம் வழங்கிய இடைக்காலத் தீர்ப்பின் பிரகாரம் கர்நாடக அரசு செயற்பட வேண்டும் என்று உயர் நீதிமன்றம் வழங்கிய உத்தரவைத் தமிழ்நாடு அரசு நியாயப்படுத்துகிறது. பத்திரிகையாளர்களுடனான பிரச்சினையில் உயர் நீதிமன்றத்துடன் அரசு மோதல் நிலைப்பாட்டை எடுக்கிறது. அரசின்

நாடினேன், இவ்வாறு பல சந்தர்ப்பங்கள் எனக்கு ஏற்பட்டன.

ஆனால் இப்போது செய்யப்படுவது போல் பத்திரிகைகளின் குரல் வளையை நசுக்குவதற்கு நான் ஒரு போதும் பிரயத்தனம் செய்யவில்லை.

களுக்கும் இடையே தற்போது ஏற்பட்டிருக்கும் மோதலாகும்.

சட்ட சபையில் எதிர்க்கட்சிகள் அற்ப பிரதி நிதித்துவத்தையே கொண்டிருக்கின்றன. எனவே பத்திரிகைகள் எதிர்க்கட்சிகளின் பணியை செய்ய

சில விளைவுகளும் ஏற்படலாம். ஆனால் அரசியல்வாதிகள் போன்று நாட்டிற்குக் கேடு விளையும் எனத் தெரிந்திருந்தும் நடவடிக்கைகளில் இராஜதந்திரிகள் இறங்குவதில்லை. அத்தோடு, தமது ஆட்சிக் காலம் வரையும் ஆட்சியில் இருந்துவிட்டுச் செல்வதற்கு வழி தேடுபவர்களும் அல்ல அவர்கள்.

இந்நிலையில், ஜே. என் டிக்சிற் விடுதலைப் புலிகளைத் தடை செய்வது சரியானதொரு நடவடிக்கை அல்ல எனக் கூறுவது, விடுதலைப் புலிகள் மீது கொண்ட நட்பினாலோ, அன்றி தமிழர் மீது கொண்ட பாசத்தினாலோ அல்ல. ஆனால் இது இந்தியாவின் எதிர்கால நலன் பற்றியது ஆகும். அவ்வாறு டிக்சிற் கருதுவதற்குத் தனியாக அவரது இராஜதந்திர அறிவு மட்டுமல்ல, இலங்கையிலும், பாகிஸ்தானிலும் அவர் தூதுவராக இருந்து பெற்ற நேரடி அனுபவங்களும் காரணங்களாகும் என்பதில சந்தேகமில்லை.

திரு. ஜே. என். டிக்சிற் இலங்கையில் பெற்ற அனுபவமும், அவர் இலங்கையை விட்டுச் சென்றபின் நடைபெற்ற நிகழ்வுகளும் சிங்கள ஆட்சியாளர்கள் எப்பொழுதும் இந்தியாவை ஒரு உற்ற நண்பனாக நம்பிக்கைக்குரிய நண்பனாகப் பார்ப்பதற்குத் தயாராக இல்லை என்பதை அவர் தெளிவாகப் புரிந்து கொண்டுள்ளார். தென்னாசியாவில், கொழும்பு எப்பொழுதும் இந்திய எதிரணியினருடனேயே நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளமையும் நட்புப் பாராட்டுகின்றமையும் வெளிப்படையான அம்சமாகவே இருந்தது. கடந்த வருட இறுதியில் இடம்பெற வேண்டியிருந்த 'சார்க்' மாநாடு குழப்பமடைந்த போது, பாகிஸ்தான், பங்களாதேஷ், சிறிலங்கா ஓரணியில் நின்று இந்தியாவைக் குற்றம் சாட்டியமை, சிறிலங்கா எப்பொழுதும் நட்புச் சக்தியாக இருக்கப் போவதில்லை என்பதையே தெளிவாகக் காட்டியது.

இதேபோன்று இந்தியா தமிழருக்கு எதிரான போரில் 4000க்கு மேற்பட்ட இராணுவத்தினரை இழந்தும் பலகோடி டாலர் செலவு செய்தும், இந்திய இராணுவத்தை ஓர் ஆக்கிரமிப்பு இராணுவம் என்றே சிறிலங்கா தலைமைத்துவம் கருத்து வெளியிட்டது. ஒப்பந்தத்தின் பிரகாரம் வந்தஇராணுவம் எனசிறிலங்கா கருதவில்லை இது சிறிலங்கா எப்பொழுதுமே இந்தியாவை நட்புநாடாகப் பார்க்கவில்லை என்பதையே காட்டுவதாகவுள்ளது.

இதேவேளை இலங்கைத் தமிழ் மக்களோ எப்பொழுதும் இந்தியாவுடன் பாரம்பரிய நட்புடன் நேச சக்தியாகவே இருந்து வந்தனர். இருக்க விரும்புகின்றனர். இந்தியா இலங்கைத் தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்பட்டபோதுமட்டும் தமது உரிமையை நிலைநிறுத்த இலங்கைத்தமிழர் போராடினார்களே ஒழிய எப்பொழுதும் இந்தியாவை ஓர் விரோத சக்தியாக எண்ணவில்லை. தற்பொழுதும், இந்தியா தனது உணர்ச்சிகரமானதும், அதிகாரத்தன்மையானதுமான நடைவடிக்கைகளை நிறுத்திவிட்டு, இலங்கைத் தமிழ் மக்களுக்கு நட்புக்கரம் நீட்ட முடியும் இதனால் நன்மையும் அடைய முடியும்.

இவற்றைக் காலம் கடந்தாவது திரு. டிக்சிற் உணர்ந்திருப்பது வரவேற்கத்தக்கதொன்றாகும். இதை விடுத்து அரைவேக்காடு அரசியல் வாதிகளின் கூச்சலுக்குப் பணிந்து இந்திய அரசாங்கம் விடுதலைப்புலிகளைத் தடைசெய்வதினால், தென்னாசியாவிலேயே இந்தியா தனது ஒரே நட்புச் சக்தி ஒன்றை இழப்பதாக முடியுமே ஒழிய வேறு எந்த நன்மையும் அடைந்து விடப்போவதில்லை. இந்தியா அவ்வாறான தவறை விடுமானால் இலங்கை விவகாரத்தில் 1987 ஆம் ஆண்டு இந்தியா - சிறிலங்கா சமாதான ஒப்பந்தத்தின் பின்னர் விட்ட அடுத்த மாபெரும் இராஜ தந்திரத் தவறாக அது அமையும் என்பதில் கேள்விக்கே இடமில்லை.

---

ரத்திலே முதலமைச்சர் ஒரு போதும் சபாநாயகரின் ஆசனத்தில் அமர்ந்ததும் இல்லை. எந்தவொரு பத்திரிகையினதோ அல்லது சஞ்சிகைகளினதோ ஆசிரியரோ நிருபரோ எச்சரிக்கை செய்யப்படும்அபாயத்தை எதிர்நோக்கியதுமில்லை.

இவ்வாறு திராவிடமுன்னேற்றக் கழகத் தலைவர் மு. கருணாநிதி தெரிவித்துள்ளார். அ.தி.மு.கவின் அடக்கு

...தூரமான விளைவுகள் ஏற்படும் என்பதை ஜெயலலிதா அரசிற்கு கூறிவைக்க விரும்புகிறேன்.

தமிழக சட்டசபையின் மதிப்பும் கௌரவமும் மேலும் அரித்துச் செல்லப்படுவதைத் தடுக்கு முகமாக உயர் நீதிமன்றத்துடனான மோதலை அரசு தவிர்க்குமென்றே எதிர்பார்க்கிறேன்.

காவிரி நீர்ப் பிரச்சினையில்

அரசு மோதல் நிலைப்பாட்டை எடுக்கிறது. அரசின் இத்தகைய நிலைப்பாடு காவிரிப் பிரச்சினையில் கர்நாடக முதலமைச்சர் பங்காரப்பாவின் நிலைப்பாட்டை வலுப்படுத்துவதானதா?

வசைமாரி பொழியும் எழுத்துக்களுக்கெதிராக எவ்வாறு நடவடிக்கை எடுப்பதென்பது குறித்து உகந்த சட்ட ஆலோசனைகளை நான்முதலமைச்சராக இருந்த போது

பிரயத்தனம் செய்யவில்லை. பத்திரிகைத் துறையில் உள்ள எனது நண்பர்கள் சுட்டெரிக்கும் வெயிலை கண்ட பின்னர் தான் நிழலின் அருமையை புரிந்துணர்ந்து கொண்டிருப்பார்கள்.

ஜெயலலிதாவின் பொறுமையில்லா குணாதிசயத்தின் உச்சக் கட்டத்தின் விளைவே சட்ட சபைக்கும் பத்திரிகை

கட்சிகளின் பணியை செய்ய வேண்டும் என்று உச்சாடனம் செய்த ஜெயலலிதா தனது பத்துமாத கால ஆட்சியின் நிகழ்வுகள் தொடர்பாக மக்கள் மத்தியில் உருவாகிவரும் கசப்பான அபிப்பிராயத்தை எவ்வாறு தான் நசுக்கப் போகின்றாரோ என்றுஎனக்கு விளங்கவில்லை.

---

# சீன - இந்திய எல்லைகளை மீண்டும் திறக்க இணக்கம்

(டில்லி)

சீனாவும் இந்தியாவும் தமது எல்லைகளில் உள்ள காவல் நிலையங்களை மீண்டும் திறப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளன.

இந்த இரு நாடுகளும் தமது பிரச்சினைக்குரிய எல்லைக் காவல் நிலையங்களை வருடத்திற்கு நாலு மாத காலம் திறந்து வைக்கும் என்றும்

இந்தியாவுடன் திபெத்தை இணைக்கும் நான்கு மார்க்கங்கள் இவற்றுள் அடங்குகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த எல்லைக் காவல் நிலையங்கள் மீண்டும் திறக்கப்படுவதால் ஒவ்வொரு ஆண்டும் யூன் மாதம் முதல் செப்டெம்பர் மாதம் வரை இந்தியாவிலிருந்து புனிதப் பயணத்தை மேற்கொள்வோரும் உல்லாசப் பயணிகளும் திபெத்தில் உள்ள புனித தலங்களுக்கு விஜயம் செய்ய முடியும்எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமெரி. நீதிமன்ற தீர்ப்பை எவ்வாறு நம்ப முடியும்?

## - லிபிய ஜனாதிபதி கடாபி

(லண்டன்)

அமெரிக்க நீதிமன்ற தீர்ப்பு விமான குண்டு வைப்புச் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட லிபியர்கள் இருவரையும் அமெரிக்காவிடம் கையளிக்கக் கூடாது என்ற எண்ணத்தை தமக்கு ஏற்படுத்தியிருப்பதாக லிபிய ஜனாதிபதி கேணல் கடாபி தெரிவித்துள்ளார்.

பிரிட்டிஷ் 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகைக்கு கடாபி அளித்த பேட்டியொன்றிலேயே இது பற்றி அவர் கூறினார்.

அமெரிக்கநீதிமன்றத்தீர்ப்பு லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் வன்முறைகளைத் தூண்டிவிட்டது என்றும், இந்தத் தீர்ப்பை உற்று நோக்கும் போது எமக்கும் அமெரிக்க ஜூரர்களிடமிருந்து நியாயமான முடிவை எதிர்பார்க்க முடியாதெனவும் கடாபி தெரிவித்துள்ளார்.

இந்த நூற்றாண்டில் அமெரிக்காவில் இடம் பெற்ற மிகப் பயங்கர அமைதியின்மை காரணமாக மூன்று தினங்களில் ஐம்பத்தியெட்டுப் பேர் உயிர் இழந்தனர் என்றும்,

கறுப்பினச் சாரதியான ரொட்னி கிங் விடயத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பு தமக்கு அதிர்ச்சியூட்டியதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தெரிவித்திருக்கும் போது

அமெரிக்க நீதிமன்றத்தைநாம் எப்படி நம்ப முடியும்? என்றும் கடாபி தமது பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

# அமெரிக்காவின் அதிநவீன விண்கலம் 'என்டெவர்' விண்வெளி சென்றது

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் அதி நவீன விண்கலமான 'என்டெவர்' அதன் கன்னிப் பயணத்தை ஆரம்பித்தது. 'சலஞ்சர்' கலத்திற்குப் பதிலாகவே என்டெவர் கலம் அமைக்கப்பட்டு விண்வெளிக்கு அனுப்பப்பட்டது.

காலநிலை சீர்கேடு மற்றும் கம்பியூட்டரில் ஏற்பட்ட சிறு கோளாறுகள் காரணமாக விண்கலம் 34 நிமிடநேர தாமதத்திற்குப் பின்னரேயே பயணத்தை ஆரம்பித்தது இருநூறுகோடி டொலர் செலவில் அமைக்கப்பட்ட வெள்ளைநிற விண்கலமான என்டெவர் கடந்த திங்கட்கிழமை காலை மணி 5.10 க்கு அனுப்பப்பட்டது.

1986 ஆம் ஆண்டு ஜனவரி மாதம்விண்வெளிப்பயணத்தை ஆரம்பித்த சலஞ்சர் கலம் ஆரம்பத்திலேயே வெடித்துச் சிதறியது. இதனால் விண்வெளி வீரர்கள் ஏழு பேர் உயிரிழந்தனர்.

சலஞ்சருக்குப் பதிலாகவே என்டெவர் அனுப்பப்பட்டது. இக்கலத்தில் ஒரு பெண்ணும் ஆறு ஆண்களும் விண்வெளிப் பயணிகளாகச்சென்றுள்ளனர். இவர்கள் ஏழு தினங்கள் விண்கலத்தில் பயணம் செய்வார்கள் எனத்தெரிவிக்கப்படுகிறது.

விண்வெளிக்குச் சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் அனுப்பப்பட்டு, பயனற்ற நிலையிலுள்ள செய்மதி ஒன்றைக் காப்பாற்றுவதற்கே என்டெவர் செல்கிறது.

# சட்டமன்றத்தை விசாரிக்க நீதிமன்றத்தால் முடியாது

## — சேடப்பட்டி முத்தையா

(காஞ்சிபுரம்)

ஜனநாயக அமைப்பில்சட்டமன்ற நாடாளுமன்றத் துறை நிர்வாகத்துறை, நீதித்துறை, பத்திரிகைத்துறை ஆகிய நான்கு அமைப்புக்களும் ஒன்றோடு ஒன்றுமோதிக்கொள்ளாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்றுதமிழகசட்டப் பேரவைத்தலைவர் சேடப்பட்டிமுத்தையா தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரத்தில் இடம் பெற்ற பொது நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றிய முத்தையா இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 212,193 ஆகிய பிரிவுகளின் கீழ் சட்டமன்ற நாடாளுமன்ற மற்றும் மேலவைகளுக்கென விசேட அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும்,

நாடாளுமன்ற சட்ட மன்றத்தை எந்த நீதிமன்றமும் விசாரிக்க முடியாது என்றும் குறிப்பிட்டார்.

தமிழக சட்டசபையின் இறையாண்மையை காக்க வேண்டும் என்ற ஒரே நோக்கில் தான் சில பத்திரிகைகள் மீதுதாம் நடவடிக்கை எடுத்ததாகவும் அதே நேரத்தில் யாருடனும் மோத வேண்டும் என்ற எண்ணம் தமக்குத் துளியும் இல்லை என்றும் அவர் கூறினார்.

# ஜெயலலிதாவிற்கு புத்திகூற கருணாநிதி வேண்டுகோள்

(சென்னை)

அரசாங்கத்தினால் ஏற்பாடு செய்யப்படும் வைபவங்களில் தன்னையும்தனது கட்சியையும் முதலமைச்சர் ஜெயலலிதா தாக்கி வருவதாகவும் இத்தகைய போக்கைத்தடுத்து நிறுத்துவதற்கு இந்தியப் பிரதமர் பீ. வி. நரசிம்மராவ் தலையிடா விட்டால் மத்திய அமைச்சர்கள் தமிழகம் வரும் சந்தர்ப்பங்களில் எல்லாம் கறுப்புக்கொடிப்போராட்டம் நடத்தப்போவதாகவும் தி.மு.க. தலைவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தூத்துக்குடியில் புதிய விமானநிலையம் ஒன்றைத் திறந்து வைப்பதற்கு அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வைபவத்தில்ஜெயலலிதா கட்சி அரசியல்நடத்தியதை கடுமையாகக் கண்டனம் செய்த கருணாநிதி இந்த வைபவம் மத்திய அரசினாலும் மாநில அரசினாலும் கூட்டாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததையும் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

இத்தகைய நடத்தைகள் ஜெயலலிதாவின் அரசியல் கலாசாரத்தின் தன்மையையும், பாரம்பரியங்கள், சம்பிரதாயங்களுக்கு அவர் காட்டும் அவமரியாதையையுமே பிரதிபலிக்கின்றன. அரசாங்கம் ஏற்பாடு செய்யும் வைபவங்கள் அரசியல் மேடையாக மாற்றப்படக் கூடாது, தூத்துக்குடி வைபவத்தில் மத்திய அரசும் சம்பந்தப்பட்டிருப்பதன் காரணத்தினால், ஜெயலலிதாவிற்கு உகந்த முறையில் புத்தி கூறுமாறும் இத்தகைய நிகழ்வுகள் மீண்டும் இடம் பெறாதிருப்பதை உறுதிப்படுத்துமாறும்பிரதமர் நரசிம்மராவிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன் என்றும் கருணாநிதி கூறினார்.

ஈழநாதம்

# உலகின் பொருளாதார விடயங்களில் தனித்து முடிவு செய்ய வேண்டாம்

## அமெரிக்காவிடம் ஜப்பான் கோரிக்கை

[டோக்கியோ]

உலகின் பொருளாதார விடயங்களில் ஒருதலைப்பட சமாக முடிவு எடுக்க வேண்டாமென அமெரிக்காவை ஜப்பான் கேட்டுக் கொண்டுள்ளது.

அமெரிக்க உதவி ஜனாதிபதி நேற்று டோக்கியோவில் ஜப்பானிய தலைவர்களோடு பேச்சுவார்த்தை நடத்திய போது ஜப்பானின் இந்த வேண்டுகோள் தெரிவிக்கப் பட்டது.

ஜப்பானின் வெளியுறவு அமைச்சர் வட்டநாபே கூறுகையில் இரு நாடுகளையும் பாதிக்கும் தீர்மானங்களை எடுக்க முன்னர் ஒருவரை ஒருவர் கலந்தாலோசிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார் அவர் மேலும் கூறுகையில் இவ்வாறில்லாவிட்டால் இரு நாடுகளும் இணைந்து செயற்படுவதை ஜப்பானிய மக்கள் அனுமதிக்க மாட்டார்கள் என்றும் தெரிவித்தார்.

இதனிடையே ஜப்பானின் முழு இணக்கத்தையும் பெறுவதற்கு முன்பாக ரஷ்யாவிற்கு பல்வேறு உதவிகளையும் வழங்கப் போவதாக அமெரிக்காவும் ஜேர்மனியும் அறிவித்ததை அடுத்து ஜப்பானியத் தலைவர்கள் ஆத்திரம் அடைந்ததாக ஏஜென்சிச் செய்திகள் சுட்டிக் காட்டியுள்ளன.

### நாகொர்ணோ - காராபாக்

# பிரச்சினையைத் தீர்க்க ஐ.நா.சபை தூதுக்குழுக்கள்

(நியூயோர்க்)

நாகொர்ணோ - காராபாக் பிரச்சினையைத் தீர்க்கும் வழிவகைகளை ஆராய்வதற்காக ஐ.நா.சபை தூதுக்குழுவொன்றை அனுபபவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஐந்து பேரைக் கொண்ட குழுவொன்று இன்னும் சில தினங்களில் அசர்பைசான் தலைநகர், ஆர்மேனியத் தலைநகர் பிரச்சினைக்குரிய நாகொர்ணோ காராபாத்திற்கு செல்வார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

நாகொர்ணோ காராபாக்கில் கடந்த நான்கு வருடங்களாக நடைபெற்ற போரில் சுமார் 2000 பேர் கொல்லப்பட்டனர் என்றும், ஆர்மேனிய மக்கள் பெரும்பான்மையாக வாழும் நாகொர்ணோ காராபாக் 1923 ஆம் ஆண்டு முதல் அசர்பைசானால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

### பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி தேர்தல்

# மரியன் சண்டியாகோ முன்னணியில் உள்ளார்

[மணிலா]

பிலிப்பைன்சில் அண்மையில் நடைபெற்ற ஜனாதிபதி பதவிக்கான தேர்தலில்முன்னாள் நீதிபதியான மரியன் சண்டியாகோ முன்னணியில் இருப்பதாகத் தெரியவருகிறது இது வரை எண்ணப்பட்ட வாக்குகளின் அடிப்படையில் திருமதி மரியன் சண்டியாகோ இருபத்தாறு சதவீத வாக்குகளைப் பெற்றுள்ளார். இவருக்கு அடுத்த படியாக முன்னாள் இராணுவ அமைச்சரான பிடல் ராமோஸ் முன்னணி வகிக்கின்றார்

முன்னாள் அதிபர் பேர்டினன்ட் மார்க்கோஸின் மனைவியான திருமதி இமெல்டா மார்க்கோஸ் ஐந்தாவது இடத்திற்கு தள்ளபட்டுள்ளார். வாக்குகள் எண்ணும் பணி

# லிபியாவிலிருந்து ரஷ்யா வெளியேற்றம்

ஐ. நா. ஸ்தாபனம் லிபியா மீது கொண்டு வந்த தடை... நூற்றுக்கணக்கான ரஷ்ய அர ணுவ நிபுணர்களை தாய...

### இன்றைய உதைபந்தாட்ட போட்டி

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் பதினொரு பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில், பிரிவு ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட ஆறு கழகங்களுக்கிடையிலான லீக் முறையிலான இரண்டாவது சுற்றுப் போட்டியில்இன்று சுன்னாகம் ஸ்கந்தா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரவெட்டி நவசக்தி விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. இன்று பி. பகல் 3 30 மணிக்கு யாழ் சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இப்போட்டி நடைபெறவுள்ளது.

# இடப்பெயர்ந்த தீவக மக்கள் ஜனாதிபதிக்கு மகஜர்

இடப்பெயர்ந்த தீவக மக்கள் நலன் காக்கும் கழகப் பிரதிநிதிகள் அடங்கிய குழு யாழ். செயலகத்தில் கழகத் தலைவர் வ. ஐயாத்துரை அவர்களின் தலைமையில் அரச அதிபர் திரு. மாணிக்கவாசகர் அவர்களைச் சந்தித்து தீவக மக்களினதும், முகாம்களில் வாழும் மக்களினதும், பல்வேறு தேவைகள், கஷ்டங்கள் பிரச்சினைகள் பற்றி எடுத்துக் கூறப்பட்டதுடன், தீவக மக்களின் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றும் ஜனாதிபதியிடம் வழங்குமாறு கையளித்தது

மேற்படி சந்திப்பின்போது உடனடியாக நிறைவேற்றித் தருமாறு பின்வரும் கோரிக்கைகள் விடப்பட்டது.

1. தீவகத்திலிருந்து இடம் பெயர்ந்து முகாம்களில்வாழும் குடும்பங்களில் ஏற்படும் மரணச் சடங்கிற்கு நிதியுதவி வழங்கல்.

2. முகாம்களில் வாழும் மக்களுக்கு சமையல் பாத்திரங்கள் கிடைக்க நடவடிக்கை எடுத்தல்.

3. தீவக முகாம்களில் வாழும் மக்களுக்கு தீவக பல நோ. கூ. சங்கங்கள் மூலம் நிவாரணப் பொருள்கள் பெற நடவடிக்கை எடுத்தல்.

4. இடம் பெயர்ந்த மாணவர்கட்கு வேண்டிய பாடசாலைச் சீருடைகள் கப்பல் மூலம் தருவிக்க ஏற்பாடு செய்தல்.

5. முகாம்களில் வாழும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் போஷாக்கு உணவு கிடைக்க வழிசெய்தல்.

6. முகாம்களில் சுகாதார, வைத்திய வசதிகளை மேலதிகமாக ஏற்படுத்திக் கொடுத்தல்

7 துவிச்சக்கரவண்டி. அதற்குரிய உதிரிப்பாகங்களைக் கப்பல் மூலம் தருவிக்க நடவடிக்கை எடுத்தல்.

8. தீவகத்திலிருந்து இடம் பெயர்ந்த அரச ஊழியர்கள் ஓய்வூதியர்களுக்கு இலவச உலர் உணவு நிவாரணம் கிடைக்க நடவடிக்கை எடுத்தல்.

மேற்படி கோரிக்கைகளை இயன்றளவு நிறைவேற்றித் தர முயற்சிப்பதாகவும், சில கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றித் தர நடவடிக்கை எடுப்பதாகவும் கூறினார்.

### தொண்டர் ஆசிரியருக்கு

# நியமனம் வழங்கக் கோரி ஆசிரியர்கள் ஊர்வலம்

(வடமராட்சி கிழக்கு)

தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கக்கோரி பளையில் நேற்றுக் காலை ஆசிரியர் ஊர்வலம் ஒன்றினை நடத்தினர். இப் பேரணியில் பளை கொத்தணியைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

பேரணி தர்மக் கேணியில் ஆரம்பமாகி. கோஷங்களை எழுப்பி, சுலோக அட்டைகளை ஏந்திய வண்ணம் பளை பஸ் நிலையத்திற்கு ஊடாக பளை உதவி அரசாங்க அதிபர் பணிமனையை சென்றடைந்தது.

அங்கு பளை உதவி அரசாங்க அதிபர் செல்வி கே. அன்னமயிலிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

கிளிநொச்சி கல்விப் பணிப்பாளருக்கும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துக்குமான மகஜரை பளை கொத்தணி அதிபர் திரு ப அரிபரத்தினம் பெற்ற அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உறுதியளித்தார். (36)

# கடனை மீளச் செலுத்தும் கால எல்லை நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இயங்கும் தேசிய வீடமைப்பு திணைக்களம் முன்னர் வழங்கிய கடன்களை மீளச் செலுத்துவதற்கென வழங்கப்பட்டிருந்த சலுகைகளை ஆகஸ்ட் முப்பத்தோராம் திகதி வரை நீடித்துள்ளது.

மீளச் செலுத்தப்பட வேண்டிய முழுத்தொகையையும் ஒரே தடவையில் செலுத்துபவர்களுக்கு பத்து சதவீத கழிவு வழங்கப்படவிருப்பதோடு தவணை தப்பிய அறவீடுகளுக்கான தண்டப்பணம் அறவிடுதலும் நிறுத்தப்படுவதாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் யாழ் மாவட்ட முகாமையாளர் அறிவித்துள்ளார்.

# வர்த்தமானி பார்வையிடலாம்

பட்டதாரி பயிலுனர்களை நிரந்தரமாக்குவதற்கான பரீட்சை விண்ணப்பப் படிவம், முறைமைகள் பகுப்பாளர் பதவி விண்ணப்பப்படிவம், சமநலசேவை பெரும்பாக உத்தியோகத்தர் பதவி விண்ணப்பப்படிவம் என்பவற்றை உள்ளடக்கிய 24-4-92, 08-05-92 திகதியிடப்பட்ட அரச வர்த்தமானிகள் மறுமலர்ச்சிக் கழக நூலகத்தில் பார்வையிடலாம் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

# வாழைச்சேனை அகதி முகாம்

(மட்டக்களப்பு)

வெலிக்கந்த, மூத்துக்கல் பகுதிகளில் இருந்து வெளியேறி அகதிகளாக வாழைச்சேனை வந்துள்ள தமிழ் அகதிகள் குடும்பங்களை தங்கவைப்பதற்கென வாழைச்சேனையில் அகதி முகாமொன்று அமைக்கப்படவிருப்பதாக மட்டக்களப்பு அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

### கோட்டப்பாடசாலை

# தொண்டர் ஆசிரியருக்கு நியமனம்வழங்ககோரிக்கை

(பதுளை)

கடந்த பல வருடங்களாக எந்த வித வருமானமுமின்றி தோட்டப் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாக... தோட்டப் பாடசாலைகளுக்கு தொண்டர் ஆசிரியர்களாக சேரும் போது அவர்களிடம் சில தராதரங்கள் குறைவாக காணப்பட்ட...

# சுதந்திரக் கட்சி எம். பியின் தபால்முத்திரையில் மோசடி

(கொழும்பு)

பெருந் தொகையான கடித... யோகம் செய்துள்ளது என்று...

ஐ. நா. ஸ்தாபனம் லிபியா மீது கொண்டு வந்த தடை காரணமாக லிபியாவிலுள்ள

## மீட்பு நிதி

பருத்தித்துறை-வட இந்து மகளிர் கல்லூரியில் 17 ஆம் திகதி காலை 9-00 மணிக்கு ,

சாவகச்சேரி. பச்சிலைப் பள்ளி பிரிவுகளுக்கு சங்கத்தானை-சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் 17ஆம் தி. தி பிற்பகல் 3-00 மணிக்கும் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நூற்றுக்கணக்கான ரஷ்ய ஆர ணுவ நிபுணர்களை தாயகம் கொண்டு வரும் நடவடிக்கைகளை ரஷ்யா ஆரம்பித்து உள்ளது.

லிபியா தலைநகரான திரிப்பொலிக்குச் சென்ற ரஷ்ய விமானங்கள் சுமார் இருநூறு இராணுவ நிபுணர்களை சொந்த நாட்டிற்கு திருப்பிக் கொண்டு வந்தன. சுமார் 1500 ரஷ்ய நிபுணர்களும், 350 தொழில் நுட்பவியலாளர்களும் லிபியாவிலுள்ளனர்.

## 4-ம் ஆண்டுநினைவஞ்சலி



தோற்றம்:
1966-06- 8

மறைவு:
1987-05-18

### செல்லத்துரை பிரதீபன்

நினைவில் அகலாத ஒளி விளக்கே!
எம்மை நல் மக்களாக வளர்த்த புகழ் உனக்கே!
குடமியன் ஊர்தனிலே ஒளி படைத்தீர்
எம் குடும்பத்திற்கு புகழ் கொடுத்தீர்
கண் இருந்தும் உறக்கம் இல்லை உம்மை நினைத்து
ஆண்டு நான்கு அகன்றாலும் உன் அன்பு
நினைவு அகலாது

அப்பா, அம்மா, சகோதரர்கள்,
சகோதரிகள், நண்பர்கள்.

குடமியன்
வரணி,
கொடிகாமம். (2571)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மகேந்திரா வீதி. 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1992ஆம் ஆண்டு மேமாதம் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

மார்க்கோஸ் ஐந்தாவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளார். வாக்குகள் எண்ணும் பணி முடிவடைய இன்னும் சில நாட்கள் எடுக்கும் எனவும் தெரியவருகின்றது.

பிலிப்பைன்சில் தேர்தல் வன்முறைகளின் போது பலர் உயிரிழந்தது குறிப்பிடத்தக்கதாகும்

## தமிழ்

காலை 10-00 மணியளவில் இவ் ஊர்வலம் ஆரம்பமாகியது. ஊர்வலத்தில் கலந்து கொண்ட மாணவர்கள் பல சுலோக அட்டைகளைத் தாங்கிய வண்ணமும் கோஷங்கள் எழுப்பியவாறும் அணிவகுத்துச் சென்றனர்.

''சிறைப் பிடித்திருக்கும் மாணவர்களை விடுதலை செய், ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளும் மாணவர்களைச் சிறைப்பிடிக்காதே, சுற்றி வளைத்து மாணவர்களை கைது செய்யாதே மாணவர்களுக்குரிய சுதந்திரத்தைப் பறிக்காதே, பாடசாலைகள் மீது குண்டு வீசாதே'' போன்ற பல கோஷங்கள் மாணவர்கள் தாங்கிச் சென்ற பாதைகளில் காணப்பட்டன.

களுவாஞ்சிக்குடி மணல் வீதி ஊடாகவும். களுவாஞ்சிக்குடி சாரதா படமாளிகை பிரதானவீதி ஊடாகவும் இந்த ஊர்வலம் சென்றது களுவாஞ்சிக்குடி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது. பின்னர் மீண்டும் பிரதானவீதி ஊடாக அணிவகுத்துச் சென்ற ஊர்வலம் களுவாஞ்சிக்குடி உதவி பொலிஸ் காரியாலயத்திற்கு சென்றது. அங்கு உதவிப் பொலிஸ் அத்தியட்சகரிடமும் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது இந்தச் சந்தர்ப்பத்தில் அங்கு நின்ற பொலிசார் ஊர்வலத்தில் கலந்து கொண்ட மாணவர்கள்மீது தடியடிப் பிரயோகம் செய்தனர். இதனால் பல மாணவர்கள் பலத்த காயமடைந்திருக்கின்றனர். சுமார் நூறிற்கும் மேற்பட்ட மாணவர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

இச் சம்பவங்களை அவதானித்த தேச விரோத குழுக்களைச் சேர்ந்தவர்கள் கைதட்டி ரசித்துக்கொண்டிருந்ததாக கூறப்படுகிறது.

காயமடைந்த மாணவர்கள் களுவாஞ்சிக்குடி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர். கைதுசெய்யப்பட்டவர்கள் மறுநாள் விடுதலை செய்யப்பட்டதாக தெரியவருகிறது.

எந்த வித வருமானமுமின்றி தோட்டப் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாக சேவை செய்தவர்களுக்கு அண்மையில் வழங்கப்பட்ட தொண்டர் ஆசிரியர் நியமனத்தில் அதிகமானோருக்கு நியமனம் கிடைக்கவில்லை. எனவே இவற்றை நன்கு பரிசீலனை செய்து தகுதி உடையவர்களுக்கு நியமனம் வழங்கப்பட வேண்டுமென ஊவாமாகாண சபையின் மாதாந்த கூட்டத்தில் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

ளாக சேரும் போது அவர்களிடம் சில தராதரங்கள் குறைவாக காணப்பட்ட போதும் தற்போது தேவையான தகுதிகளை அவர்கள் பெற்றுள்ளனர் என்றும்.

எந்த விதமான பெறுமானங்களையும் பெறாமல் சேவை செய்த இவர்களுக்கு விசேட கவனம் செலுத்தி தகுதியானவர்களுக்கு வெகு விரைவில் நியமனம் வழங்க வேண்டுமென்றும் கேட்கப் பட்டுள்ளது.

## லொறிச் சாரதிகளிடமிருந்து

# புளொட் குழுவினரால் பணம் வசூலிப்பு

[கொழும்பு]

வவுனியாவில் சோதனை நிலையங்களில் இராணுவத்துக்கு உதவியாகச்செயற்படும் புளொட் குழுவினர் லொறிச் சாரதிகளிடமிருந்து பணம் வசூலிப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது இத்தகவலை வவுனியா இராணுவத்தினர் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் - கொழும்பு சேவையில் ஈடுபட்டிருக்கும் லொறி ஒவ்வொன்றிடமும் 3,000 ரூபா முதல் 5 000 ரூபா வரை இவர்கள் வசூலிப்பதாக அவ்வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நாளொன்றுக்குச் சுமார் 1,00,000 ரூபா வசூலிக்கிறார்களென்றும், 50 முதல் 60 லொறிகள்வரை சோதனை முகாம்களைத் தாண்டும் போது வசூல் அதிகம் என்றும் தெரிவிக்கப்படுகிறது

## வீரமுனை

கொள்வனவு நிலையத்தில் தமிழ் முஸ்லிம் தொழிலாளர் இடையே ஏற்பட்ட வேலை, வேலை நேரம் ஆகியன தொடர்பாக மனக்கசப்பு ஏற்பட்டது

இதனைத்தொடர்ந்து சிவனடியான் சந்திரசேகரம், காளிக்குட்டி பொன்னுத்துரை, கணபதிப்பிள்ளைஇராஜேந்திரம், சின்னத்தம்பிசதாசிவம் ஆகியோர் கைது செய்து தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மனக்கசப்படைந்த முஸ்லிம் தொழிலாளர்களினால் சோடிக்கப்பட்ட இச்சம்பவத்தால் தமிழ்த்தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அந்த நால்வரையும் உடனடியாக விடுதலை செய்யுமாறும் அப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.

## பிரசவத்தின்

வார்.

இக்குடும்பம் வெற்றிலைக்கேணி இராணுவ நடவடிக்கைக்குப் பின்னர் உடுத்துறை வடக்கிலிருந்து இடம் பெயர்ந்து நாகர்கோவிலில் வாழ்ந்து வந்தனர்.

பிரசவத்தின் போது ஏற்பட்ட முட்டு வருத்தம் காரணமாகவே இவர் மரணமாகியதாகத் தெரிய வருகிறது.

அவசர சிகிச்சை அளிப்பதற்கு அவரை, வசதியான வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்வதற்கு வாகன வசதி கிடைக்கவில்லை.

வடமராட்சி கிழக்கிற்கு அம்புலன்ஸ் வண்டி வசதி செய்து தரும்படி, கடந்த பல வருடங்களாக அப்பகுதி பொதுமக்களும், பொது ஸ்தாபனங்களும் சுகாதார அதிகாரிகளைக் கோரி வந்த போதிலும். அவை தட்டிக்கழிக்கப் பட்டு வந்ததினால் கடந்த காலங்களில் மருதங்கேணி, அம்பன் பகுதியிலுள்ள வைத்திய சாலைகளில், பல துயரமான சம்பவங்கள் ஏற்பட்டுள்ளன. (36)

## வீரச்சாவு

ணன் (செலஸ்ரீன் தளையசிங்கம் உடையார்கட்டு, சுதந்திரபுரம்) வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

(கொழும்பு)

பெருந்தொகையான கடிதங்களை தபாலில் அனுப்புவதற்கு இனந்தெரியாத நபர்கள் தனது உத்தியோக பூர்வமான முத்திரையை துஷ்பிரயோகம் செய்துள்ளது என்று கொழும்பு மாவட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சி எம். பி; சி. வி. குணரத்தினா தபால் அதிகாரிகளிடமும் சி. ஐ. டி களிடமும் புகார் செய்துள்ளார்.

சிறிமாவைக்காட்டி

# வாக்குக்கேட்ட யுகம் மறைந்துவிட்டது - அநுரா

(குருநாகல்)

''சிறிமாவைக் காட்டி வாக்குக் கேட்ட யுகம் மறைந்து விட்டது. ஏதாவது காரணத்தினால் திருமதி பண்டாரநாயக்கா கட்சிப் பதவியிலிருந்து விலகினால், நான் தலைமைத்துவத்திற்கு போட்டியிடுவேன்''

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் அநுரா பண்டாரநாயக்கா குருநாகலில் தெரிவித்தார்.

## அரச

அதிபர் பிரிவுகள் பன்முகப்படுத்தும் வேலைகள். ஆகியன பற்றிப் பரிசீலனை செய்யப்படவுள்ளது. (ச, பா)

## 21, ££ ஆம திகதி

வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் 22ஆம்திகதிஅன்றே வழங்கப்படும் என யாழ் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் அறிவித்துள்ளது [பா]

## அதிகாரிகள்நியமனம்

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இருபத்திநான்கு வினையாட்டு அதிகாரிகள் நியமிக்கப்படவுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

## மரண அறிவித்தல்

### திரு. வினாசித்தம்பி மாணிக்கம்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கும்பப்பிள்ளை கோப்பாய் தெற்கை வசிப்பிடமாக கொண்டவருமான திரு. வினாசித்தம்பி மாணிக்கம் 13-05-92 அன்று அவரது இல்லத்தில் காலமானார் அன்னார் திருமதி மாணிக்கம் இரத்தினத்தின் அன்புக் கணவரும், திருமதி தவசோதி கெங்கேஸ்வரன், செல்வி மா. தவமலர், திரு. மா. யோகேஸ்வரன் (பெரியண்ணை), திரு. மா. கோடீஸ்வரன் (கனடா) திரு. மா. நகுலேந்திரன் (பிரான்ஸ்), திரு. மா. நந்தகுமார், செல்வி மா. சசிகலா (கனடா) ஆகியோரின் அன்புத்தந்தையும், திரு. நடராசா கெங்கேஸ்வரனின் அன்பு மாமனும், செல்வன் கெ. சயந்தனின் அன்புப் பேரனும். திரு. வி. தம்பிராசா, திருமதி கந்தையா இராசம்மா காலஞ் சென்றவர்களான திரு. வி. நாகையா, திரு. வி. இரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற திரு. வ. கந்தையாவின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக இன்று 14-05-1992 முற்பகல் 11 மணியளவில் இருபாலை கந்தன் காடு மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாபேரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
திரு. மா. யோகேஸ்வரன்
(மகன்)

இருபாலை கிழக்கு.
கோப்பாய்

(2570)